பக்கங்கள் 14+6

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## சாதாரண தரப் பரீட்சை திங்கட்கிழமை ஆரம்பம்

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 15 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறும் . 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சாத்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 20 வெள்ளிக்கிழமை 03.05.2024 அதிர்வு 275

# பொது வேட்பாளராகக் களமிறங்கும் ரணில்: ஜூனுக்குப் பின்பே அதிகாரபூர்வ அறிவிப்பு

நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிட்டது என்ற உத்தரவாதத்தை சர்வதேசம் வழங்கிய பின்னரே ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் அறிவிப்பை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் என அறியமுடிகின்றது.

எதிர்வரும் ஜூன் நடுப்பகுதியில் வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கை மீண்டுவிட்டது என்ற அறிவிப்பு வெளிவரவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

04



# இலங்கையில் ஊடகவியலாளர்கள் இன்னமும் இராணுவத்தினரின் தீவிர கண்காணிப்புக்குள்

## எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு அறிக்கை



**இலங்கையில் ஊடகவியலாளர்கள் இன்னமும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் திட்டமிட்ட முறையில் கண்காணிக்கப்படுகின்றார்கள் என்று எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.**

**சர்வதேச ஊடக சுதந்திர தினமான இன்று, 2024ஆம் ஆண்டுக்கான ஊடக சுதந்திரக் குறிகாட்டியை வெளியிட்டுள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு, இலங்கையை 150 ஆவது இடத்தில் பட்டியலிட்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.**

**இலங்கையில் ஊடக சுதந்திர விடயங்கள் 2009 ஆம் ஆண்டு வரை அந்த நாட்டில் காணப்பட்ட உள்நாட்டு யுத்தத்துடன் தொடர்புபட்டவையாகக் காணப்படுகின்றன என்று தெரிவித்துள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு, தமிழர் போராட்டம் ஒடுக்கப்பட்டவேளை ஊடகவியலாளர்கள் பலருக்கு எதிராக இடம்பெற்ற இன்னமும் தண்டிக்கப்படாத வன்முறைக் குற்றங்களுக்கும் ஊடக சுதந்திரத்துக்கும் தொடர்பு உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.**

04

# மனோ எம்.பி. - பிரான்ஸ் தூதுவர் சந்திப்பு

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனுக்கும், இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜோன் பிரான்கொயிஸ் பெட்டுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

கொழும்பில் உள்ள பிரான்ஸ் தூதுவரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது, பிரான்ஸ் தூதுவருடன், தூதரக துணைத் தலைமை அதிகாரி திருமதி மாரி நொயெல்லா தூரிசும் உடன் இருந்தார்.

இதன்போது, இலங்கைக்குப் பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் உதவிகள் இலங்கையின் தமிழ் மக்களுக்கும், பின்தங்கிய பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு மனோ கணேசன் பிரான்ஸ் தூதுவரைக் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில், மனோ கணேசன் எம்.பி. பின்வருமாறு கூறியுள்ளார்.

"பிரான்ஸ் தூதுவர் ஜோன் பிரான்கொயிஸ் இல்லத்தில் பிரான்ஸிய விருந்தோம்பல்



# தான் கொண்ட கொள்கையில் இருந்து வழுவாது பெருமனிதனாக உழைத்த மாமனிதர் ஈழவேந்தன்

## இரங்கல் செய்தியில் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

(நடராசா லோகதயாளன்)

ஈழத்தையும், ஈழத்தமிழர்களையும் ஆழ நேசித்த தமிழ்த் தேசியவாதியான மா.க.ஈழவேந்தன் ஐயாவின் மறைவு வருத்தமளிக்கிறது என்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணத்தில் கொழும்புத் துறையில் பிறந்த இவர், மண்டைதீவு மண்ணின் முன்னாள் கிராம சபைத் தலைவர் கைலாயபிள்ளை ஐயாவின் மூத்த மகளான அருளாம்பிகையை திருமணம் செய்ததன் மூலம் தீவகத்துக்கும் தனக்குமான இறுக்கம் மிகுந்த பிணைப்பை உருவாக்கிக் கொண்டார்.

இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றி, பின்னர் பொருளாதார ஆய்வுத் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றியவர்.

அரசதுறையின் உத்தியோகத்தராக இருந்துகொண்டே அரசின் இனவாத அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடிய இவரது வாழ்க்கைப் பயணம் எம்மில் பலருக்கு ஒரு கனத்த செய்தியைச் சொல்ல வல்லது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களுள் ஒருவராகவும், தமிழரசுக் கட்சி – தமிழர் விடுதலைக் கூட்டணியின் பங்காளிக் கட்சியாக இருந்த காலத்தே அதன் கொழும்புக் கிளைத் தலைவராகவும் இருந்து ஈழவேந்தன் ஐயா ஆற்றிய அரசியற்பணி மிகக் கனதியானது.

ஈழவிடுதலைப் போரின் மீதும் அதன் நியாயப்பாட்டின் மீதும் அதீத பற்றுறுதி மிக்கவராக இருந்த காரணமாகவே கனகேந்திரன் என்னும் தனது இயற்பெயரைக்கூட ஈழவேந்தன் என மாற்றம் செய்து, அதனையே தனது அடையாளமாகவும் மாற்றியிருந்தார்.





தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வென்பது தமிழீழமாக மட்டுமே இருக்க முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த ஈழவேந்தன் ஐயா, அதனையே கொள்கையாகக் கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான காவலூர் வி.நவரத்தினத்தால் உருவாக்கப்பட்ட தமிழர் சுயாட்சிக் கட்சியில் இணைந்து, அந்தக் கொள்கைக்காகவே அயராதுழைத்தவர்.

இனக்கலவரங்களின் தோற்றுவாய்கள் விரிவடையத் தொடங்கிய 1981களில் தமிழகம் சென்றிருந்த இவர், விடுதலைப் புலிகளுக்கு மருந்து கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் 1997 இல் கைதுசெய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் சிறையிருந்து பின் நாடு திரும்பினார்.

2004 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டு அரசியல் பணியாற்றிய ஈழவேந்தன் ஐயா, போர் மௌனிக்கப்பட்டதன் பின்னரான அரசியல் நீரோட்டத்திலும் தன்னை இணைத்துக்கொண்டார். இதன் அடிப்படையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினராக இருந்தும் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை கோரிய பயணத்தின் பங்குதாரராக பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார்.

முதுமை, அது தந்த இயலாமை உள்ளிட்ட உடல்வாதைகள் அனைத்தையும் புறந்தள்ளி தனது 91 ஆவது வயது வரை ஈழத்தமிழர்களுக்காகவும், தமிழ்த் தேசிய இனத்தின் நிரந்தர அரசியல் தீர்வுக்காகவும் தான் கொண்ட கொள்கையினின்று வழுவாத பெருமனிதனாக இதய சுத்தியோடு உழைத்த மாமனிதர் ஈழவேந்தன் ஐயாவின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கிறோம். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது பிள்ளைகள் உறவினர்களின் துயரில் நானும் பங்கு கொள்கிறேன். – என்றார்.

# கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய தூதரால் வாழ்வாதார பொதிகள்!

(எப். நவாஸ்)

ஒலுவில் துறைமுக கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான வாழ்வாதார பொதிகள் இந்திய தூதரால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், மாகாண சபை அமைச்சர் எம் எஸ். உதுமாலெவ்வை, அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர், உதவிப் பிரதேச செயலாளர், ஒலுவில், அட்டாளைச்சேனை, பாலமுனை, நிந்தவூர் மீனவ சங்க தலைவர்கள், மற்றும் ஆழ்கடல் மீனவர்கள், பள்ளிவாசல் தலைவர்கள் மற்றும் துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

GSM GUNAAM SUPERMARKET
குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# பெண் தலைமைக் குடும்பத்துக்கு இராணுவத்தினரால் வீடமைப்பு!




**(பாறுக் ஷிஹான்)**

பெண் தலைமை தாங்கும் குடும்பம் ஒன்றுக்கு கல்முனை 18 ஆவது விஜயபாகு காலாட் படைப் பிரிவு முகாம் இராணுவத்தினரால் வீடொன்று நிர்மாணித்து கொடுப்பதற்கான அடிக்கல் நேற்று (02) நடப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் இலங்கை இராணுவத்தின் 24 வது காலாட் படை பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அனில் பெரேராவின் ஆலோசனைக்கு அமைய 241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பதிரட்ன வழிகாட்டலில் அம்பாறை கல்முனை 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சேனைக்குடியிருப்பு -1 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இந்த வீட்டுக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இதன் போது இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக 241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பதிரட்னவால் அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அம்பாறை கல்முனை 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் களுஆராச்சி உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இது தவிர கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் மற்றும் நிர்வாக கிராம உத்தியோகத்தர் அமலதாசன், கிராம உத்தியோகத்தர் சுந்தரராஜன் மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# நாவற்குழியில் கஞ்சாவுடன் இரண்டு பேர் கைதாகினர்



**(த.சுபேசன்)**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குழி பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கஞ்சா போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவற்குழிப் பகுதியில் போதைப் பொருள் விற்பனை இடம்பெறுவதாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது 1200 மில்லிகிராம் மற்றும் 960மில்லி கிராம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதுபெரும் ஈழப் போராளிக்கு இதயாஞ்சலி!

## ஈழவேந்தனின் மறைவை அடுத்து சுரேஸ் பிரேமச்சந்திரன் இரங்கல் செய்தி



தமிழீழ விடுதலைக் களத்தின் அறப் போராளி மா.க.கனகேந்திரன் என்னும் ஈழவேந்தன் தனது 91 வயதில் கனடா ரொறொன்ரோ மாநகரில் ஏப்ரல் 28ஆம் திகதி உயிரிழந்தார் என்னும் செய்தி கவலையளிக்கிறது.

சில நாள்களுக்கு முன் குளியலறையில் தவறி விழுந்து, தலையில் பலத்த காயம் ஏற்பட்டதால் ஏற்பட்ட உடல்நலக் குறைவே இறப்புக்குக் காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

தமிழர்களுக்காக, தமிழீழ விடுதலைக்காக தம் வாழ்நாள் முழுவதையும் ஒப்படைத்துக் கொண்டவர் மா.க.ஈழவேந்தன்.

மா.க.ஈழவேந்தனின் மறைவை அடுத்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் துணைத் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதையும் மென்மையாகவும் ஆணித்தரமாகப் பேசும் திறனுடைய ஈழவேந்தன், தமிழீழ விடுதலை முன்னணி என்ற இயக்கத்தை வழி நடத்திக் கொண்டிருந்தாலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் மூலம் 2004 இல் இலங்கையில் நியமன எம். பியாக எம்மோடு பயணித்தவர்.

காலவோட்டத்தில் அவராலும் இலங்கை மண்ணில் வாழ முடியாத சூழல்களால் கனடாவில் தஞ்சம் புகுந்து அங்கிருந்து கொண்டும் தன்னால் இயன்ற பணிகளை ஈழ விடுதலைக் காற்றினார்.

அடிப்படையில் ஒரு காந்தீயவாதியாக எளிமையான வாழ்க்கை முறையை வாழ்ந்தார். அனைவரோடும் அன்பாகப் பழகும் பண்பாளர்.

இலங்கையில் வங்கி அதிகாரியாக பணியாற்றி பின்னர் ஈழவிடுதலைக்காக அதைவிட்டு நீங்கி வந்து இறுதிவரை உறுதியோடு இயங்கியவர்.

அன்னாரது மரணம் ஈழமக்களுக்கும் எமக்கும் பேரிழப்பாகும். அவரது இழப்பில் வாடும் அனைவரோடும் நாமும் இணைகின்றோம்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பிலும் எமது கட்சியான ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி சார்பிலும் இதயாஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.- என்றுள்ளது.

# சமையல் எரிவாயுக்களின் விலை இன்று நள்ளிரவு முதல் குறைப்பு

லிட்ரோ சமையல் எரிவாயு விலை இன்று நள்ளிரவு முதல் குறைக்கப்படும் நிலையில், புதிய விலைப்பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோ எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 175 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 3 ஆயிரத்து 940 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோ எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 70 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக ஆயிரத்து 582 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2.5 கிலோ எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 32 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 740 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




இதேவேளை, இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லாஃப் சமையல் எரிவாயுவின் விலையும் குறைக்கப்படுகின்றது என்று லாஃப் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய லாஃப் சமையல் எரிவாயுவின் விலை 275 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி அதன் புதிய விலை 3 ஆயிரத்து 840 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் 5 கிலோகிராம் நிறையுடைய லாஃப் சமையல் எரிவாயுவின் விலை 110 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1,542 ரூபாவாகும்.

# சொந்த மகளைக் கொடூரமாகத் தாக்கி காணொளி பதிவு செய்த தந்தை கைது

பலாங்கொட பெட்டிகல பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர், தனது மகளைக் கொடூரமாகத் தாக்கி வீடியோவை சமூக ஊடகங்களில் வெளியிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மனைவி ஒன்பது மாதங்களுக்கு முன்னர் வெளிநாட்டுக்குச் சென்றிருந்த நிலையில், சிறுமியைக் கவனித்துக் கொள்வதற்காக மேற்படி நபரிடமும் பெற்றோரிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே மேற்படி சிறுமி அவரது தந்தையால் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ள நிலையில், சிறுமி பலாங்கொட ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதையடுத்து கைது செய்யப்பட்ட தந்தியை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பலாங்கொடை நீதிவான் ஹெஷானி ரொட்ராகோ இன்று உத்தரவிட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மனோ எம்.பி...**

ஆசாரத்துடன் கூடிய பயனுள்ள சந்திப்பு நிகழ்ந்தது. தெற்கு உலக நாடுகள் தொடர்பில் பங்களிப்புகளை வழங்க பிரான்ஸ் இன்று உறுதியாக இருப்பது என்னைக் கவருகின்றது. ஜனாதிபதிகள் மக்ரோன், ரணில் ஆகியோர் மத்தியிலான பேச்சுகளின் பின் இலங்கைக்குச் சமுத்திரதுறை தொடர்பில் உதவ பிரான்ஸ் ஆர்வம் கொண்டுள்ளது என்று தூதுவர் மற்றும் தூதரக துணைத் தலைமை அதிகாரி ஆகியோர் என்னிடம் கூறினர்.

பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் உதவிகள் இலங்கையில் தமிழ் மக்களுக்கும், பின்தங்கிய பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு நான் கோரினேன். நமது மக்கள் தொடர்பில் விசேட வேலைத்திட்டங்களை முன்மொழிந்து முன்னெடுப்பது தொடர்பில் தொடர்ந்து பேச்சுகள் நடத்துவது பற்றியும் கலந்துரையாடினோம்." – என்று மனோ எம். பி. குறிப்பிட்டுள்ளார்.

**பொதுவேட்பாளராக....**

அதுவரை நலன்புரித் திட்டங்களை முன்னெடுப்பது எனவும், முன்கூட்டியே தேர்தலில் களமிறங்கும் அறிவிப்பை விடுத்தால் அது நலன்புரித் திட்டங்களைப் பகிரும் விடயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

தான் பொது வேட்பாளராகக் களமிறங்க உத்தேசித்துள்ளதால் வெளியில் இருந்துகூட பலரும் ஆதரவு வழங்கலாம் என்ற கருத்தையும் தனக்கு நெருக்கமானவர்களிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ளார்.

**சாதாரண...**

பாடசாலைகளில் இருந்து 3 இலட்சத்து 87 ஆயிரத்து 648 விண்ணப்பங்களும், தனியாரிடமிருந்து 65 ஆயிரத்து 331 விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. 3 ஆயிரத்து 521 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும்.

கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் உபகரணம் உள்ளிட்ட பரீட்சை நிலையங்களுக்குக் கொண்டுவருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள உபகரணங்கள் கொண்டுவரப்படும் விகிதம் அதிகரித்துள்ளது. எனவே, இம்முறை கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளுக்கு பரீட்சை எழுதத் தடைவிதிக்கும் இந்த நடவடிக்கையில் எவரும் ஈடுபடக்கூடாது என்று பரீட்சைகள் திணைக்களம் கேட்டுள்ளது.

**இலங்கையில்...**

220 இலட்சம் மக்கள் வசிக்கும் இலங்கையில் ஊடகத்துறை இன்னமும் ஆபத்தில் உள்ளது என்றும் எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக ஊடகத் தொழில்துறையினர் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டனர் என்று தெரிவித்துள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு, 2015 ஆம் ஆண்டின் பின்னர் எந்த ஊடகவியலாளரும் கொல்லப்படவில்லை என்றும், ஆனால் முந்தைய கொலைகளுக்குக் காரணமானவர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

"இலங்கையில் ஊடகவியலாளர்கள் இன்னமும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் திட்டமிட்ட முறையில் கண்காணிக்கப்படுகின்றார்கள். அவர்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள். உள்நாட்டுப் போர் இடம்பெற்ற பகுதிகளுக்குச் செல்வதற்குச் சுயாதீன ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது." – என்று எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.



# நெல்லூர் கலைமகள் வித்தி. மாணவருக்கு உபகரணம்






( வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உள்ள நெல்லூர் கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறிய குடும்பங்களுடைய 60 மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு பாடசாலையின் அதிபர் பா. லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

"எழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்" எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பல கஸ்ர பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

இந்த நிகழ்வில் பாடசாலை இணைப்பாடவிதான இணைப்பாளர் சி. கண்ணன், முன்பள்ளி பாடசாலை உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. கணேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆயித்தியமலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் து. வித்தியானந்தன், இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான சி.காந்தன், சி.துலக்சன், சனாதானன் ஆகியோர் கலந்து கொண்டு 60 மாணவர்களுக்கான பாடசாலைக்கு செல்வதற்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பவற்றை வழங்கினர்.

# கலைஞர்களுக்குக் கௌரவிப்பும் அடையாள அட்டை வழங்கலும்





(சர்ஜுன் லாபீர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கலைஞர்களைக் கௌரவித்து அவர்களுக்கான உதவித் தொகை மற்றும் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு நேற்று (02) காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வி.ஜெகதீசன் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் கலந்து கொண்டார்.

மாவட்ட, பிரதேச கலாசார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். கலைஞர்களுக்கான காசோலைகள் மற்றும் கலைஞர் அடையாள அட்டைகள் என்பனவும் வழங்கப்பட்டன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஊடக எண்ணம்

இன்று மே 3ஆம் திகதி சர்வதேச ஊடக தினம்.

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று மதிக்கப்படும் ஊடகத்துறை எதிர்கொள்ளும் சவால்கள், அதன் கடமைகள், பொறுப்புக்களை மீட்டுப் பார்க்கும் ஒரு குறியீட்டு நாள் இது.

ஜனநாயகக் கட்டமைப்பின் மிக முக்கிய கூறுகளாக மூன்று வகுக்கப் பட்டுள்ளன. நிறைவேற்றதிகாரம், சட்டமாக்கல் துறை, நீதி நிர்வாகத் துறை ஆகியவையே அந்த மூன்றும்.

இவை மூன்றும் ஒன்றில் ஒன்று தங்கியிராமலும், தலையிடாமலும், சுயாதீனமாகவும் செயற்பட வேண்டும் என்பது ஜனநாயக கோட்பாடு. அப்போதுதான் ஜனநாயக ஆட்சி செழுமை பெறும்.

அந்த மூன்று துறைகளும் நீதி, நியாயம், ஒழுங்கு முறையில் செயல்படுகின்றனவா என்பதை கண்காணிக்கும் காவல் நாயாக விளங்குவது ஊடகத் துறை.

அந்த ஊடகத்துறையின் பொறுப்பைப் போற்றி, உறுதிப்படுத்தும் நாள்தான் இன்றைய ஊடக சுதந்திர தினமாகும்.

மனிதர்களின் அடிப்படை உரிமைகளில் பிரதானமானது கருத்து வெளிப்பாட்டு சுதந்திரமாகும். அதன் பிரதான கருவியாக விளங்குவது ஊடகத் துறையே.

ஊடக சுதந்திரம் நசுக்கப்படும் போது சமூகத்தின் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரமும் நசுக்கப்படுகின்றது. அடக்குமுறை தீவிரம் கொள்கிறது என்பதுதான் அதன் அர்த்தம்.

இலங்கையில் யுத்தம் உச்சம் பெற்றிருந்த காலத்தில் - இருண்ட யுக ஆட்சியில் - அடக்குமுறை உச்சமாக கட்டவிழ்ந்த போது - மிக மோசமான நெருக்குவாரங்களை எதிர்கொண்டது ஊடகத் துறைதான்.

எழுதுகோலை துப்பாக்கிகள் அராஜகமாக மிதித்த துர்ப்பாக்கிய காலம் அது. பல டசின் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். சேர்ந்த குற்றத்துக்காக ஊடகத்துறையின் பிற பணியாளர்களின் உயிர்களும் காவு கொள்ளப்பட்டன. ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டன. ஊடகப் பணியாளர்கள் கடத்தி இம்சைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். மோசமாக நடத்தப் பட்டார்கள். அடிக்கடி அச்சுறுத்தப் பட்டார்கள். கைது செய்யப்பட்டு மோசமான சட்டங்களின் கீழ் கொடுமைப்படுத்தப்பட்டார்கள்.

ஊடகப் பணியாளர்கள் பலர் துணிந்து உண்மையை உரைத்த 'குற்றத்திற்காக' தங்களையும் குடும்பங்களையும் காப்பாற்றுவதற்கு வேறு வழியின்றி நாட்டை விட்டுத் தப்பி ஓடி பிற தேசங்களில் தஞ்சம் புக வேண்டியவர்களானார்கள்.

இருண்டயுக ஆட்சி முடிவுக்கு வந்து விட்டதாக கூறப்பட்டாலும், அந்த வேளையில் ஊடகத்துறைக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் எதற்கும் நியாயம் காணப்படவில்லை. நீதி செய்யப்படவில்லை. பொறுப்பு கூறல் நிலைநாட்டப்படவில்லை. இழப்பீடுகள் வழங்கப் படவில்லை. தண்டனை விலக்களிப்பு தொடர்கின்றது. மீள நிகழாமை கூட உறுதிப்படுத்தப்படவில்லை.

அதே ஊடக அடக்குமுறை அராஜகம் வேறு வடிவத்தில் - நியாயமான சட்ட முறைகள் என்ற புதிய முகமூடி அணிந்து - தலைகாட்ட எத்தனிக்கும் போக்கே தொடர்கின்றது.

உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையை உதாசீனப்படுத்தி, குப்பை கூடையில் தூக்கி எறிந்து விட்டு, அதற்கு முரணான முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் நிகழ்நிலைக் காப்புச் சட்டமும் -

புதிய வடிவத்தில் பிரயோரிக்கப் பட்டிருக்கும் பயங்கரவாக எதிர்ப்புச் சட்ட மூலமும் -

இருண்ட யுக ஆட்சிக்காலக் கொடூரங்கள் புதிய வேடத்துடன் கால் வைப்பதற்குத் தயாராகிவிட்டன என்ற செய்தியைத்தான் நமக்கு எடுத்துரைத்து நிற்கின்றன.

ஊடகத்துறை அடக்குமுறை பற்றிய எச்சரிக்கை ஒலியை - அபாய சங்கை - ஊடகங்களாகிய நாம் எல்லோரும் இப்போது ஓங்கி ஒழித்தாலும், அத்தகைய பொறுப்புடனும் சமூகக் கட்டுப்பாட்டுடனும் சுயமான நீதி - நேர்மைப் பண்பியல்புடனும் ஊடக தர்மம் எனும் நியாயக் கோட்பாட்டை - கடப்பாட்டை - நாங்களாகவே கடைப் பிடித்து ஒழுக எத்தனிக்கின்றோமா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

ஊடகங்களின் - குறிப்பாக சமூக ஊடகங்களின் - பொறுப்பற்ற போக்கே ஊடக அடக்குமுறைக்கான எத்தனங்களுக்கு வெற்றிலை வைக்கின்றன என்ற யதார்த்த உண்மையையும் ஊடகத்துறை இன்றைய சர்வதேச ஊடக நாளில் கவனத்தில் எடுத்து, பொறுப்புணர்வுடன் தன் கடப்பாட்டை நிறைவு செய்ய முன்வர வேண்டும். அப்போதுதான் ஊடக அடக்குமுறைக்கு எதிராகக் குரல் எழுப்பும் தகுதியும் தார்மீக நியாயமும் ஊடகங்களுக்குக் கிடைக்கும்.



# பருத்தித்துறையில் நடைபெற்ற ஈ.பி.டி.பியின் மே தின நிகழ்வு!

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தமது மே தின நிகழ்வுகளை பருத்தித்துறையில் ஏற்பாடு செய்திருந்தது.

அதனடிப்படையில் ஈ.பி.டி.பி. இவ்வாண்டுக்கான தொழிலாளர் தினம் பருத்தித்துறை நகரில் பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் கட்சியின் ஊடக பேச்சாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமை தாங்கியிருந்தார்.

முன்பதாக மேதின நிகழ்வுகளில் ஒரு அங்கமாக யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலக முன்றலில் இருந்து அழைக்கப்பட்ட நூற்றுக் கணக்கான மக்களின் பிரசன்னத்துடன் வாகனப் பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் – பருத்தித்துறை பிரதான வீதி வழியாக பருத்தித்துறை நகரைச் சென்றடைந்தது.

முன்பதாக மேதின நிகழ்வுகளில் ஒரு அங்கமாக யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலக முன்றலில் இருந்து அழைக்கப்பட்ட நூற்றுக் கணக்கான மக்களின் பிரசன்னத்துடன் வாகனப் பேரணி, பருத்தித்துறை நகரை நோக்கி, யாழ்ப்பாணம் – பருத்தித்துறை பிரதான வீதி வழியாக வந்தடைந்திருந்தது.

இதேநேரம் மற்றொரு வாகன பேரணி கட்சியின் சாவகச்சேரியிலுள்ள பிரதேச அலுவலக முன்றலில் இருந்து பேரெழுச்சியுடன் ஆரம்பித்து பருத்தித்துறையை நோக்கி வந்தடைந்தது.

இதன்பின்னர் பலநோக்கு கூட்டறவு சங்க கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் உழைப்பாளர் தின செய்தி வாசிக்கப்பட்டது. உறுதியும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேலும் தொழிற் சங்ககங்களின் பிரதிநிதிகள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் தொழிலாளர் உரிமைகளை வலியுறுத்தி சிறப்புரையாற்றினர்.









(இன்று சர்வதேச ஊடக சுதந்திர தினம் - ஒவ்வொரு ஆண்டும், மே 3ஆம் திகதி உலக ஊடக சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்படுகிறது)

# ஈழத்தில் ஊடகங்கள் மீதான அடக்குமுறை!

- நவீனன் -

ஒவ்வொரு ஆண்டும், பத்திரிகையாளர் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் தகவல் பரிமாற்றம் சீராக இருப்பதை உறுதி செய்ய அவர்கள் ஆற்றும் கடமைகளை நினைவூட்டுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஊடக சுதந்திர தினம் அனுசரிக்கப்படுகிறது.

### ஈழத்தில் ஊடக அடக்குமுறை

ஈழத்தில் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூர தாக்குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது.

1981 இல் ஈழநாடு எரிப்புமுதல், பின்னர் இந்திய இராணுவத்தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின்





மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளினால் பிரயோகிக்கப்பட்டது.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் ஒடுக்கு முறைகளையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுபோன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்னம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூபசிங்கம் தேவகுமார், என சுதந்திர ஊடகத்துறையை காக்கவென அயராது உழைத்த எத்தனையோ பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

அத்துடன் சுப்பிரமணியம் ராமச்சந்திரன், பிரகித் எக்னலிய கொட என எத்தனையோ ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

### ஊடக சுதந்திர தினம் 2024

பத்திரிகை சுதந்திரம் அல்லது ஊடக சுதந்திரம் என்பது, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் உட்பட பல்வேறு ஊடகங்கள் மூலம் தகவல் தொடர்பு மற்றும் வெளிப்பாடு சுதந்திரமாக பயன்படுத்தப்படும் உரிமையாக கருதப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையாகும்.

இத்தகைய சுதந்திரம் என்பது ஒரு மிகையான நிலையில் இருந்து குறுக்கீடு இல்லாததைக் குறிக்கிறது. அதன் பாதுகாப்பு அரசியலமைப்பு அல்லது பிற சட்டப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு மூலம் கோரப்படலாம்

உண்மையை மக்களிடம் கொண்டு சேர்ப்பது ஊடகங்களின் பொறுப்பு. இருப்பினும், அச்சுறுத்தல்கள், வன்முறை மற்றும் தணிக்கை போன்ற தங்கள் கடமைகளைச் செய்வதில் அவர்கள் பெரும்பாலும் சவால்களை எதிர்கொள்கின்றனர்.

பத்திரிகைகளும் ஊடகவியலாளர்களும் தங்கள் கடமைகளை மிகவும் நேர்மையான வழியில் மேற்கொள்வதற்கு ஏற்ற சூழலை அரசும் பொதுமக்களும் புரிந்துகொண்டு உருவாக்குவது முக்கியம்.

### சிங்கள ஊடகர்கள் படுகொலை

ஸ்ரீலங்காவிலும் 1990 ஆம் ஆண்டு இன்ரர் பிறஸ் சேர்வீஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளன் றிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு இந்த நீண்ட கறைபடைந்த வரலாறு தொடர்ந்தது எனலாம்.

28 ஏப்ரல் 1990 ஆம் ஆண்டு றிச்சட் டி சொய்சாவின் உடல் கண்டெடுக்கப்படுகிறது. அவரது உடலை அடையாளங்கண்டு கொண்டவர் தராகி

தொடர்ச்சி ▼

# ஈழத்தில் ஊடகங்கள் மீதான அடக்குமுறை!

தொடர்ச்சி ▲

என்ற தர்மரட்ணம் சிவராம் தமிழ் நெற் இணையத்தினுடைய ஆசிரியரான இருந்தவர். பின்னர் 28 ஏப்ரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைப்பட்டியல் பின்னர் நீண்டு அதிகரித்து வந்துள்ளது. தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். உண்மைத் தகவல்களை வெளிக் கொண்டுவந்தார்கள் என்பதற்காக இவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் 1948 மனித உரிமைகள் உலகளாவிய பிரகடனம் இவ்வாறு கூறுகிறது: "ஒவ்வொருவருக்கும் கருத்து சுதந்திரம் உள்ளது. இந்த உரிமையில் குறுக்கீடு இல்லாமல் கருத்துகளை வைத்திருப்பதற்கும், எந்த ஊடகத்தின் மூலம் தகவல் மற்றும் யோசனைகளைத் தேடுவதற்கும், பெறுவதற்கும் மற்றும் வழங்குவதற்கும் சுதந்திரம் உள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### தமிழ் ஊடக படுகொலை

பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி வந்த நிமலராஜன் 2000 ஆண்டு அக்டோபர் 19 ஆம் தேதி கொல்லப்பட்டார்.

ஈழப் போரின் மையப்புள்ளியாக இருந்த யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி கொண்டிருந்த மயில்வாகனம் நிமலராஜன் 24 வருடங்களுக்கு முன்பு அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டார்.

கொடூரமான போரால் இலங்கையில் பதற்றமான சூழல் நிலவிக் கொண்டிருந்த வேளையில் பலத்த ஆபத்துகளுக்கு மத்தியில் தொடர்ந்து போர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும் பிபிசி தமிழ் உட்பட பல ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி கொண்டிருந்தவர் நிமலராஜன்.

அதன்பின் 2004 மே 31 இல் நடேசன் படுகொலை செய்யப்பட்ட துயர நாளாகும். தான் வாழ்ந்த சமூகத்தின் நீதிக்காக அரசியல் சமூக விடுதலைக்காக குரல் கொடுத்த பத்திரிகையாளன் ஒருவனுக்கு அதற்கு பரிசாக நடு வீதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட நாள்.

தமிழர்களின் போராட்டம் ஒரு நியாயமற்ற, காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதம் எனச் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் சிங்கள மக்களுக்குப் போதித்துக் கொண்டிருந்த கால கட்டத்தில் தமிழர்களின் போராட்ட நியாயத்தையும், அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதால் மாத்திரமே இலங்கைத் தீவில் அமைதி நிலவும் என்ற யதார்த்தத்தையும் தர்க்க நியாயங்களோடு சிங்களவர்களுக்கும் புரியக் கூடியவாறு ஊடகர் சிவராம் ஆங்கிலத்தில் விளக்கினார்.

பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளுக்கு அப்பால் சிங்களத் தேசியம் பேசிய ஊடகவியலாளர்களுடனும் அவர் திரைமறைவில் தர்க்கிக்க வேண்டியிருந்தது. எவருமே துணிந்து செய்ய முன்வராத ஒரு காரியத்தை கொழும்பில் இருந்து கொண்டே செய்ய முன்வந்த சிவராமின் துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது.

மறுபுறம், தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகள் சிங்கள ஊடக அமைப்புக்களால் கண்டு கொள்ளாமல் விடப்பட்டபோது 'இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்' என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னோடியாக நின்றும் செயற்பட்டார். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.





### உதயன் மிதான தாக்குதல்

2006இல் திருகோணமலையில் ஆறு மாணவர்களின் கொலையை வெளிப்படுத்தியதற்காக உதயன், சுடர் ஒளி நிருபர் சுப்பிரணியம் சுஜிதராஜ் கொல்லப்பட்டார். 2006ம் ஆண்டு ஈழத்தின் மிகப்பெரும் ஊடகப்படுகொலையென வர்ணிக்கப்படுகின்ற உதயன் பத்திரிகை நிறுவனத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் அங்கு பணியில் இருந்த இருவரை சுட்டக் கொன்றார்கள். இது ஊடக நிறுவனத்தக்குள் புகுந்து நடத்தப்பட்ட மிகப்பெரியதும் முக்கியமானதுமான தாக்குதலாகும்.

புலம்பெயர் வாழ் தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட வன்னியைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் படுகாயமுற்று இறந்தார்.

2003 ஆம் ஆண்டு தொடக்கம் தாயகத்தில் இருந்து ஈழத்து நிலைமைகளை புலம்பெயர் ஊடகங்களுக்கு தொலைக்காட்சிகள், மற்றும் வானொலிகள் வழியாகவும் அச்சு ஊடகங்கள் வழியாகவும் இணைய ஊடகங்கள் வழியாகவும் வெளியிட்டு வந்தவர் சத்தியமூர்த்தி.

### நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்

அமெரிக்காவிலிருந்து பத்திரிகையாளர்களுக்காக செயல்படும் 'கமிட்டி டு ப்ரொடக்ட் ஜர்னலிஸ்ட்ஸ்' என்ற அமைப்பு இலங்கையில் 1992ஆம் ஆண்டு காலத்திலிருந்து 2023ஆம் ஆண்டு காலம் வரை 25 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கிறது.

ஆனால் இந்த எண்ணிக்கை 39க்கும் அதிகம் என்பதே உண்மையாகும். நிமலராஜனின்

தொடர்ச்சி ▼

# ஈழத்தில் ஊடகங்கள் மீதான அடக்குமுறை!

**தொடர்ச்சி ▲**

மரணத்திற்கு பிறகு வட கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் மட்டும் 39க்கும் மேற்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தொடர்பாக இதுவரை சொல்லிக் கொள்ளத் தக்க வகையில் இலங்கை சார்பாக எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்பட வில்லை என்பதே வரலாற்று உண்மையாகும்.

### ஊடகர்களுக்கு யுனெஸ்கோ பரிந்துரை

1991 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் பொது மாநாட்டின் பரிந்துரைக்குப் பிறகு, 1993 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஒவ்வொரு ஆண்டும் மே 3 அன்று பத்திரிகை சுதந்திர தினத்தை அனுசரிக்க நிறுவியது.

முதல் ஊடக சுதந்திர தினம் 1994 இல் அனுசரிக்கப்பட்டது. பத்திரிகைகளின் சுதந்திரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடனும், கடமையின் போது உயிர் நீத்த பத்திரிகையாளர்களை நினைவு கூர்ந்து கௌரவிக்கவும் இந்த நாள் நிறுவப் பட்டுள்ளது.

பொது மக்கள் எப்போதும் அனைத்து வகையான தகவல்களையும் அணுக வேண்டும் என்பதையும், பத்திரிகையாளர்கள் தங்கள் பணிகளைச் செய்ய பாதுகாப்பான இடத்தை உருவாக்குவதில் அரசாங்கம் அதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதையும் மீண்டும் வலியுறுத்த இந்த நாள் உதவுகிறது.

உண்மை சொல்லப்படுவதையும், பத்திரிகை சுதந்திரம் எல்லா நேரங்களிலும் மதிக்கப்படுவதையும் உறுதி செய்வதில் ஊடக நிறுவனங்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் ஆற்றிய பணிகளுக்காக இந்த நாள் கௌரவிக்கப்படுகிறது.

# எரிக் சொல்ஹெமுடன் சந்திப்பு நடத்திய கிழக்கு மாகாண ஆளுநர்

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண ஆளுநர் – ஜனாதிபதியின் சுற்றுச்சூழல் தொடர்பான சர்வதேச ஆலோசகர் எரிக் சொல்ஹெமை நேற்றுச் (2) சந்தித்துக் கலந்துரையாடினார்.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுச் சூழல் தொடர்பாக பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாணத்தில் சுற்றுச்சூழலை உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் பெற வைப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழலை முறையாக பராமரிக்கும் சந்தர்ப்பத்தில்தான் எதிர் காலத்தில் தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். இதனால் கிழக்கில் சுற்றுச் சூழலை பராமரிப்பு தொடர்பான சர்வதேச அங்கீகாரத்தை பெறும் முயற்சிகளில் மாகாண ஆளுநர் ஈடுபட்டுள்ளார்.

அதன் ஒரு முக்கிய கட்டமாக சுற்றுச் சூழல் தொடர்பான ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் எரிக் சொல்ஹெம் மற்றும் நேர்வேயின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிமான்ஸ்ஃகிளாடி ஆகியோரைச் சந்தித்து ஆளுநர் கலந்துரையாடினார்.

இதன்போது சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற சுற்றுச் சூழலை உருவாக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

கிழக்கு மாகாண சுற்றுச் சூழல் பாதுகாப்புச் செயலாளர், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர், பிரதேச சபை செயலாளர், நகரசபை செயலாளர் மற்றும் அரச உத்தியோகஸ்தர்கள் கிழக்கில் சுற்றுச் சூழலை பராமரிப்பு தொடர்பான சர்வதேச அங்கீகாரத்தை பெறுவதற்கு தேவையான வேலைத்திட்டங்களை இன்று முன்னெடுத்தனர்.







# முக்கியத்துவம் வாய்ந்தது பத்திரிகைச் சுதந்திரம் ...!

- நடராஜன் ஹரன் -

ஊடகங்கள் என்று வரும் போது, வழக்கமான பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகள் போன்ற பெருந்திரள் ஊடகங்களைத் தாண்டி, இணையத்தில் காணப்படும் செய்தித் தளங்களும் சமூக ஊடகங்களில் பகிரப்படும் தகவல்களும் கூட, ஊடகங்கள் என்ற வகைக்குள்ளேயே அடங்குகின்றன.

இதனாலேயே கடந்த கோத்தா... கோ.. கம... மற்றும் கண்டி அசம்பாவிதத்தை தொடர்ந்து சமூக வலைத்தளங்கள் இலங்கையில் முடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஊடகங்களால் கட்டியெழுப்பப்படும் ஆரோக்கியமான சூழலே, ஆரோக்கியமான ஜனநாயகத்தையும் ஆரோக்கியமான சமூகங்களையும் கட்டியெழுப்ப முடியும். ஆனால், இன்றைய காலகட்டத்தில், உலகத்திலும் சரி, இலங்கையிலும் சரி, ஆரோக்கியமான ஊடகச் சூழல் நிலவுகிறதா என்ற கேள்வி?, முக்கியமாக எழுப்பப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

ஒவ்வோர் ஆண்டும் மே 3 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் இந்தத் தினம், இவ்வாண்டும் வந்து போயிருக்கிறது. மகளிர் தினம், சிறுவர் தினம், போல, இதுவும் ஒரு தினம்.

ஜனநாயகத்தின் 4 பிரதான தூண்கள் என்று சொல்லப்படுபவற்றில், நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம், நீதித்துறை, ஊடகங்கள் என, 4 ஆவது இடத்திலேயே ஊடகங்கள் வருகின்ற போதிலும், அதற்கு மேலுள்ள 3 தூண்களும் சரியாகச் செயற்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து, மக்களுக்கு அறிவிக்கும் முக்கியமான பொறுப்பு, ஊடகங்களுக்கு உண்டு.

எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பால், வெளியிடப்பட்ட, ஊடகச் சுதந்திரச் சுட்டி, இது பற்றிய கலந்துரையாடலுக்கு முக்கியமானது. ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, உலகம் முழுவதிலும், ஊடகச் சுதந்திரமென்பது ஆபத்துக்கு உள்ளாகியுள்ளதாக, அதன்போது குறிப்பிடப்பட்டது.

பத்திரிகை சுதந்திரம் உள்ள உலக நாடுகளின் தரப்படுத்தல் வரிசையில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இலங்கைக்கு 135 ஆம் இடம் கிடைக்கப் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற கணிப்பீட்டில் இலங்கைக்கு 146 ஆம் இடம் கிடைக்கப் பெற்றிருந்தது.

உலக ஊடக சுதந்திர சுட்டி அறிக்கையின் படி, ஊடக சுதந்திரம் உச்ச அளவில் உள்ள முதலாவது நாடாக நோர்வே தெரிவாகியுள்ளது. இஸ்ரேல் 97 ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவுக்கு 161 ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது. கடைசி இரண்டு இடங்களும் 179 சீனா மற்றும் 180 ஆவது இடத்துக்கு வட கொரியா தெரிவாகியுள்ளன.

மேற்கத்தேய நாடுகள், தங்களை முன்னிலைப்படுத்துவதற்கான தகவலே இதுவென, இலகுவாகக் கூறிவிட்டுக் கடந்துபோக முடியும். இலங்கையை விட உக்ரேன், ஆப்கானிஸ்தான், நேபாளம், பிரேஸில், மத்திய ஆபிரிக்கக் குடியரசு, மாலி, மாலைதீவுகள், பிலிப்பைன்ஸ், சிம்பாப்வே, கமரூன், மியான்மார், வெனிசுவேலா போன்ற, உள்நாட்டுப் போர் அல்லது உள்நாட்டுக் குழப்பங்கள் நிலவும் நாடுகள், சிறப்பான ஊடகச் சுதந்திரத்தைக் கொண்டுள்ளன என்பது, இங்குள்ள நிலைமையை இலகுவாக வெளிக்காட்டுகின்றன.

ஊடகங்களுக்கு ஓரளவு சுதந்திரத்தை வழங்கக் கூடியது எனக் கருதப்படும் இந்த அரசு வருவதற்கு முன்பாக, இலங்கையில் நிலைமை, 165ஆவது இடத்தில் காணப்பட்டது. எனவே, இந்த முன்னேற்றம் என்பது முக்கியமானது என்ற போதிலும், 2015ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டில் 24 இடங்கள் முன்னேறிய இலங்கை, 2016இலிருந்து 2017க்கு, எந்தவித முன்னேற்றத்தையும் வெளிப்படுத்தவில்லை எனினும் 2018 இல் சற்று முன்னேற்றம் உள்ளது.

உலகின் பல நாடுகளிலே சமூக உறுதிப்பாட்டையும் விட பத்திரிகைச் சுதந்திரம் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகிறது. பத்திரிகைகளின் பணி மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும். ஏனென்றால், கோடான கோடி மக்களை சென்றடையக் கூடியவையாக இருப்பதால் பத்திரிகைகள் உண்மை நிலையை உருமாற்றம் செய்யக் கூடிய சக்தி கொண்டவையாக விளங்குகின்றன.

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனத்தின் (யூனெஸ்கோ) பொதுமகாநாட்டின் 26 ஆவது கூட்டத்தொடரில் செய்யப்பட்ட விதப்புரை யைத் தொடர்ந்து வருடந்தோறும் மே 3 ஆதேதியை உலக பத்திரிகைச் சுதந்திர தினமாக அனுஷ்டிக்க கோரும் பிரகடனத்தை 1993 டிசெம்பரில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை நிறைவேற்றியது.

1991 ஆம் ஆண்டு ஏப்ரில் 29 மே 3 வரை நமீபியாவின் வின்டோக் நகரில் "சுதந்திரமானதும் பன்முகத்தன்மை கொண்டதுமான ஆபிரிக்கப்

தொடர்ச்சி ▼

# முக்கியத்துவம் வாய்ந்தது பத்திரிகைச் சுதந்திரம் ...!

தொடர்ச்சி ▲

பத்திரிகை உலகை மேம்படுத்தல் 27 என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் ஆபிரிக்கப் பத்திரிகையாளர்களால் முன்வைக்கப்பட்ட சுதந்திரப் பத்திரிகைக் கோட்பாட்டுப் பிரகடனத்தின் வருடாந்த தினமாகவும் மே 3 ஆம் திகதி அமைந்திருக்கிறது.

இந்தப் பிரகடனம் பின்னர் யூனெஸ்கோ பொது மநாட்டால் அங்கீகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தேசங்கள் மத்தியில் செம்மையானதும் சமநிலையானதுமான செய்திகளின் சுதந்திரமான பரிமாற்றத்தையும் உலகின் சகல பாகங்களிலும் இருந்து வருகின்ற தகவல்களின் சரியான தன்மையையும் நேர்மையையும் அறிந்து கொள்வதற்கான மக்களின் உரிமையையும் மேம்படுத்துவதே இத்தொனிப் பொருளின் நோக்கமாகும்.

சுதந்திரமாக கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும் சுதந்திரமாகப் பத்திரிகைகளை வெளியிடுவதற்கும் செய்திகளைச் சதந்திரமாகஅடைவதற்கும் உலகுக்கு வாய்க்கப் பெற்ற ஒரு உரிமையைப் பாதுகாப்பதற்காகத் தங்களது உயிர்களைத் தியாகஞ் செய்தவர்களையும் சிறையில் அடைக்கப்பட்டுக் கொடுமைக்கு உள்ளாக்கப்படுபவர்களையும் நினைவு கூருவதற்கான சிறந்த ஒரு தருணமாகவும் இன்றைய தினம்அமைகிறது

அரசாங்கம் உகந்த முறையில் செயற்படுவதற்குச் சுதந்திரமானதும் நெறிமுறை வழுவாததுமான பத்திரிகைகள் அத்தியாவசியமானவையாகும். மக்களுக்கு அறிவூட்டுவதில் பத்திரிகைகளின் பங்கு அலட்சியம் செய்யப்பட முடியாததாகும். தற்போதைய நிலைவரங்களையும் நிகழ்வுப் போக்குகளையும் மக்களுக்கு அறியத் தந்து கொண்டிருப்பதில் பத்திரிகைகள் முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தை வகிக்கின்றன.

பத்திரிகைச் சுதந்திரம் என்பது அதற்கான வரையறைகளையும் கொண்ட ஒரு அடிப்படை உரிமையாகும். பத்திரிகைத் துறையில் பணியாற்றுபவர்கள் உண்மைகளை மாத்திரமே பரப்ப வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுதந்திரமானதும் வெளிப்படையானதுமான பத்திரிகைத் துறையின் பெயரில் துணிச்சலுடன் செயற்பட்டுத் தங்களை அர்ப்பணம் செய்தவர்களின் வரலாற்றின் மூலமாக எம்மால் தெளிவாக உணரக் கூடியது ஒரேயொரு உண்மையேயாகும்.

ஒடுக்கு முறையாளர்கள் முதலில் ஒழித்துக்கட்டுவது உண்மையைக் கூறுகின்ற பத்திரிகைகளையேயாகும். பத்திரிகைச் சுதந்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரமும் உண்மையான ஜனநாயக சமுதாயங்களில் வாழுகின்ற ஊடகவியலாளர்களையும் பத்திரிகைச் சுதந்திரம் என்பது இன்னமும் ஒரு கனவாகவே இருக்கின்ற சமுதாயங்களில் வாழுகின்றவர்களையும் இணைக்கின்ற ஒரு உயிர்ப்பாதையாகும்.

அதன் காரணத்தால்தான் இன்று உலகின் எந்தவொரு மூலையிலும் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடியதாக ஊடகவியலாளர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் குரல்கள் பலமாக ஒலித்து ஒருமைப்பாட்டுணர்வு வெளிப்படுத்தப்படுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

# 1,700 ரூபா சம்பள உயர்வு அறிவிப்பு; தொழிலாளர் வெற்றிக் கொண்டாட்டம்!



(ஆ.ரமேஸ்)

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபாய் சம்பள உயர்வு மற்றும் மேலதிகமாக கொய்யப்படும் பச்ச இலை கொழுந்து கிலோ ஒன்றுக்கு 80 ரூபா கொடுப்பனவுடன் கூடிய சம்பள உயர்வுக்கு வெற்றி கொண்டாட்டங்கள் நுவரெலியா,கந்தப்பளை,இராகலை பிரதேச தோட்டங்களில் தொழிலாளர்களால் நேற்றுக் (02) காலை கொண்டாடப்பட்டது.

காலை வேளையில் வழமையான தொழிலுக்கு சென்ற தொழிலாளர்கள் தோட்ட ஆலையங்கள், தொழிற்சாலைகள்,கொழுந்து நிறுவையிடும் இடங்கள்,மலைக் கோயில்கள் ஆகியவற்றில் விசேட பூசைகள் செய்தும்,பாற்சோர் சமைத்து, பட்டாசு வெடித்தும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

அதேசந்தர்ப்பத்தில் இந்த சம்பள உயர்வை பெற்றுக் கொடுத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சேவைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அமரர் ஆறுமுகம் தொண்டமானின் உருவப் படத்துக்கு மாலையிட்டு விசேட பூசைகள் செய்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான ஜீவன் தொண்டமான், மனுச நானயக்கார உள்ளிட்ட அரசுக்கும் இதன்போது தோட்ட தொழிலாளர்கள் நன்றி தெரிவித்தனர்.

இந்த நிகழ்வுகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாநில பிரதிநிதி எஸ். ரமேஸ், சிரேஷ்ட மகளிர் அணி அதிகாரி எஸ்.கௌரி, மாவட்ட தலைவர் ஆ.கிருஸ்ணகுமார் ஆகியோருடன் தொழிலாளர்களும் கலந்துக்கொண்டனர்.

# வயநாடு தொகுதிக்கு மேலதிகமாக ரேபரேலியிலும் களமிறங்கும் ராகுல்



ஏற்கனவே கேரள மாநிலம் வயநாடு தொகுதியில் ராகுல் காந்தி களமிறங்கி உள்ள நிலையில், உ.பி.யில் உள்ள ரேபரேலி தொகுதியிலும் போட்டியிடுகிறார்.

உத்தரப்பிரதேசத்தின் அமேதி மற்றும் ரேபரேலி தொகுதிகள் காங்கிரஸ் கட்சிக்கு நெருக்கமானவை ஆகும். ரேபரேலி தொகுதியில் தொடர்ந்து வெற்றி பெற்று வந்த சோனியா, இந்த முறை தேர்தலில் போட்டியிடவில்லை.

அதேநேரம் அமேதியில் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் எம்.பி.யாக இருந்த ராகுல் காந்தி, கடந்த 2019 ஆம் ஆண்டு தேர்தலில் இந்தத் தொகுதியில் தோல்வியடைந்தார்.

இந்நிலையில் உ.பி. மாநிலத்தில் உள்ள ரேபரேலி தொகுதியில் ராகுல் காந்தி போட்டியிடுவதாக காங்கிரஸ் தலைமை அறிவித்துள்ளது.

தற்போது ரேபரேலி தொகுதி எம்.பி.யாக சோனியா காந்தி இருக்கிறார். மாநிலங்களவை உறுப்பினராக சோனியா காந்தி தேர்வாகி உள்ள நிலையில் ராகுல் காந்தி போட்டியிடுகிறார்.

அமேதி தொகுதியில் ராகுல் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அங்கு கே.எல். சர்மா போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளார்.

அமேதி, ரேபரேலியில் வேட்புமனுத் தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

# மோடிக்குப் பிரதமர் பதவி இரு முறை போதும்; இம்முறை வேறு ஒருவருக்குக் கொடுக்கலாம்!

## இப்படிக் கூறுகின்றார் சுப்பிரமணிய சாமி



மீனம்பாக்கம்,மே03

வேட்பாளர்கள் ஜெயித்து வந்த பின்தான் பிரதமர் யார் என்பதை முடிவு செய்ய வேண்டும். கட்சி எம்.பிக்கள்தான் அதை முடிவு செய்ய வேண்டும். பா. ஜனதா எம்.பி.க்கள் என்னைப் பிரதமராக இருக்கச் சொன்னால் ஏற்பேன். மோடிக்கு இரண்டு முறை வாய்ப்புக் கிடைத்துவிட்டது. இந்த முறை வேறு ஒருவருக்கு கிடைக்க வேண்டும் என்பது என்னுடைய எண்ணம்.

– இப்படிக் கூறுகின்றார் சுப்பிரமணிய சாமி.

நாட்டில் சரியான எதிர்க்கட்சி தலைவர் கிடையாது. எதிர்க்கட்சி தலைவராக வரக்கூடிய தகுதி மம்தா பானர்ஜிக்குதான் உள்ளது என்றும் சுப்பிரமணிய சுவாமி கூறினார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பா.ஜனதா மூத்த தலைவர் சுப்பிரமணிய சாமி, நிருபர்களிடம் கூறியவை வருமாறு:–

பா.ஜனதாவுக்கு தனிப்பெரும் பான்மை கிடைக்கும் என்று நம்புகிறேன். கடந்த முறை கிடைத்த 300 தொகு திகளில் இருந்து 25 சீட்கள் குறைவாக 275 சீட்கள் கிடைக்கும் என எதிர்ப் பார்க்கிறேன். தமிழ்நாட்டில் நெல்லை தொகுதியில் போட்டியிட்ட நயினார் நாகேந்திரன் ஜெயிக்கலாம். மற்ற வேட்பாளர்கள் பற்றி தெரியாது. தமிழ் நாட்டில் ஒரு சீட்டுக்கு மேல் கிடைக்குமா என்பதைச் சொல்ல முடியாது.

யார் பிரதமராக இருப்பார் என கட்சிக்குள் தேர்தல் நடக்கவில்லை. வேட்பாளர்கள் ஜெயித்து வந்த பின்தான் பிரதமர் யார் என்பதை முடிவு செய்ய வேண்டும். கட்சி எம்.பிக்கள்தான் அதை முடிவு செய்ய வேண்டும். பா.ஜனதா எம்.பி.க்கள் என்னை பிரதமராக இருக்க சொன்னால் ஏற்பேன். மோடிக்கு 2 முறை வாய்ப்பு கிடைத்துவிட்டது. இந்த முறை வேறு ஒருவருக்கு கிடைக்க வேண்டும் என்பது என்னுடைய எண்ணம்.

சீனா 4 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் இடத்தை எடுத்து விட்டது. அதை மறைத்துவிட்டனர். எந்தப் பெரிய நாடும் இந்தியாவுக்கு உதவியாக இல்லை. அமெரிக்காவும் எதிரியாகி விட்டது. மோடி என்ன சொல்கிறார் என்பதைப் பார்க்கக் கூடாது. தேர்தல் அறிக்கையைத்தான் பார்க்க வேண்டும். சொந்தக் காலில் நின்று சீனாவை தோற்கடித்து வெளியேற்ற வேண்டும்.

அதுதான் முக்கியம். இது குறித்து தேர்தல் அறிக்கையில் இருக்கிறது. தமிழ்நாடு பா.ஜனதா தலைமையில் மாற்றம் வரவேண்டும். நாட்டில் சரியான எதிர்க்கட்சி தலைவர் கிடையாது. எதிர்க்கட்சி தலைவராக வரக்கூடிய தகுதி மம்தா பானர்ஜிக்குதான் உள்ளது. – இவ்வாறு அவர் கூறினார்.




# இஸ்ரேலின் அராஜகம் தொடர்கின்றமையால் அதனுடன் வர்த்தகத்தை நிறுத்தியது துருக்கி

காசாவில் நாளுக்கு நாள் நிலைமை மோசமடைந்து வருவதாலும், இஸ்ரேலால் ஏற்படும் பாதிப்புகள் நீடிப்பதாலும் இஸ்ரேலுடனான வர்த்தக நடவடிக்கைகளை துருக்கி அரசு நிறுத்தி வைத்துள்ளது. இஸ்ரேலுக்கான ஏற்றுமதியில் கடந்த மாதம் துருக்கி பல கட்டுப்பாடுகளை விதித்திருந்த நிலையில், அடுத்தகட்ட நடவடிக்கையாக அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும் நிறுத்தி உள்ளது.

இதுதொடர்பாக துருக்கி வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஏப்ரல் மாதம் இஸ்ரேலுக்கான 54 தயாரிப்பு நிறுவனங்களின் ஏற்றுமதியை அரசு தடை செய்தது. ஏனெனில் படுகொலை, மனிதாபிமான பேரழிவு, இஸ்ரேலால் ஏற்படும் அழிவுகள் தொடர்ந்தன. மேலும் இஸ்ரேலிய அரசாங்கம் சர்வதேச போர்நிறுத்த முயற்சிகளை புறக்கணித்ததுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான உதவியையும் தடுத்தது.

இப்போது இரண்டாம் கட்ட நடவடிக்கையாக, இஸ்ரேலுடனான ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. இஸ்ரேலிய அரசாங்கம் காசாவிற்கு மனிதாபிமான உதவிகளை தடையின்றி போதுமான அளவில் வழங்க அனுமதிக்கும் வரை இந்த புதிய நடவடிக்கைகளை அரசு செயல்படுத்தும்.

- இவ்வாறு துருக்கி வர்த்தக அமைச்சகம் கூறி உள்ளது.

# துபாயில் திரும்பவும் வெள்ளம் 20 விமான சேவைகள் பாதிப்பு

துபாய்,மே03

கடும் மழை காரணமாக துபாயில் இருந்து பிற நாடுகளுக்கு செல்லும் 15 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய அரபு அமீரகத்தில் கடந்த மாதம் வரலாறு காணாத கனமழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது. அத்தியாவசிய பணிகள் பாதிக்கப்பட்டன. கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டன. போக்குவரத்து, விமான சேவைகள் முடங்கின.

இந்த நிலையில், இரண்டு வாரங்களுக்கு பின்னர், ஐக்கிய அரபு அமீரகத்தில் மீண்டும் இடி, மின்னலுடன் கனமழை பெய்து வருகிறது. இந்த மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டு உள்ளது.

அங்கு இன்றும், நாளையும் கனமழை பெய்ய கூடும் என தேசிய வானிலை ஆய்வு மையம் மஞ்சள் எச்சரிக்கை விடுத்துள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. குடியிருப்புவாசிகள், வீட்டுக்குள்ளேயே இருக்கும்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டு உள்ளது.




பூங்காக்கள், பீச்சுகள் ஆகியவை தற்காலிக அடிப்படையில் மூடப்பட்டு உள்ளன. தேவையின்றி வாகன பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்றும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், போக்குவரத்து வசதியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. துபாயில் இருந்து பிற நாடுகளுக்கு செல்லும் 15 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. 5 விமானங்கள் திருப்பி விடப்பட்டன. இதனால், பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

கனடா முரசு

பக்கங்கள் 06

வெள்ளிக்கிழமை 03/05/2024

## கத்திக்குத்தில் மாணவன் காயம்

ஒன்ராரியோ, மே03 ஒட்டாவாவின் நேபியன் பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் காயமடைந்த உயர் பாடசாலை மாணவர்

C2



# ஹமாஸுக்கு ஆதரவாக கோஷமிட்டவருக்கு போராட்டத்தில் ஈடுபட 5 மாதங்கள் தடை!

பிரிட்டிஷ் கொலம்பியா, மே03 வென்கூவரில் ஹமாஸுக்கு ஆதரவாக கோஷமிட்டவருக்கு போராட்டத்தில் ஈடுபடுவதற்கு பொலிஸார் ஐந்து மாத கால தடை விதித்துள்ளனர்.

ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தை 'வீரமானது மற்றும் துணிச்சல் மிக்கது' என வர்ணித்த சார்லோட் கேட்ஸ் என்பவர் வென்கூவரின் வெறுப்புக் குற்றங்கள் விசாரணைப் பிரிவினால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டிருந்தனர்.

C2



# பூர்வீகக் குடிகளின் நிலத்திற்குள் செல்ல குயிஸ்னல் மேயருக்கு தடை

பிரிட்டிஷ் கொலம்பியா, மே03 பூர்வீகக் குடிகளின் நிலத்திற்குள் பிரவேசிப்பதற்கு குயிஸ்னல் மேயருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேயர் றொன் போலை தடை செய்வதற்கும், நகரத்தைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கான அவரது ஆற்றலில் பல்வேறு தடை விதிப்பதற்கும் குயின்சல் நகர சபை ஏகமனதாக வாக்களித்தது.

மேயரின் மனைவி வதிவிட பாடசாலை தொடர்பான சர்ச்சைக்குரிய புத்தகங்களை சமூகத்தில் உள்ளவர்களிடம் பகிர்ந்தமை தொடர்பிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு மேயரும் இந்தப் புத்தகத்தை வழங்கினார் எனக் குறிப்பிடப்படுகின்றது.




# டொரன்டோ பல்கலைக்கழக வளாகத்திலும் போராட்ட மாணவர் கூடாரங்கள் அமைப்பு

ஒன்ராரியோ, மே 03

டொரன்டோ பல்கலைக்கழக வளாகத்திலும் போராட்டக் குழு மாணவர்கள் கூடாரங்களை அமைத்துள்ளனர்.

காசாவில் தொடரும் யுத்தம் காரணமாக, இஸ்ரேலுடனான உறவுகளை முறித்துக் கொள்ளுமாறு பல்கலைக் கழக நிர்வாகத்தை வலியுறுத்தி, மாணவர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்தில் அமைக் கப்பட்டிருந்த வேலியைத் தாண்டிச் சென்று அதிகாலை 4 மணி யளவில் மாணவர்கள் கூடாரத்தை அமைத்துள் ளனர் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

கனடாவில் ஏனைய பல்கலைக்கழ கங்களிலும், அமெரிக்காவின் பல் கலைக்கழகங்களிலும் முன்னெடுக் கப்பட்டு வரும் மானவர்களின் கூடாரம் அமைத்துச் செயற்படும் போராட்டங்க ளின் தொடர்ச்சியாக தாமும் போராட் டத்தை ஆரம்பித்துள்ளனர் என டொரன்டோ பல்கலைக்கழக மாண வர்கள் தெரிவித்துள்ளனர்.

# தனது சுற்றுச்சூழல் கடப்பாடுகளை லிபரல் அரசு விட்டுக் கொடுக்கிறது

## தாக்க மதிப்பீட்டுச் சட்டம் குறித்து விமர்சனம்

ஒன்ராரியோ, மே 03

மத்திய அரசாங்கத்தின் தாக்க மதிப்பீட்டு சட்டத்தில் அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பில் சுற்றுச்சூழல் குழுக்கள் கரிசனை வெளியிட்டுள்ளன.

பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தை லிபரல் அரசாங்கம் விட்டுக்கொடுப்பதாக அந்தக் குழுக்கள் குறிப்பிட்டுள்ளன.

பாரிய செயல்திட்டங்களின் காலநிலை தாக்கங்களில் இருந்து கனடியர்கள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொறுப்பினை அரசாங்கம் விட்டுக்கொடுப்பதாக தாம் கரிசனை கொண்டுள்ளன என சுற்றுச்சூழல் குழுக்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சட்டமானது மாகாண அதிகார வரம்புக்குள் அதிகளவு சென்றுள்ளதாக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பினையடுத்தே 2024ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக சட்டத்தில் அரசாங்கம் திருத்தங்களை முன்மொழிந்துள்ளது.





### கத்திக்குத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

நேற்று மே 2ஆம் திகதி கொன்ஸ் டெல்லேசன் டிரைவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஒட்டாவா பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

சம்பவ இடத்திலேயே காயமடைந்த நபருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

### ஹமாஸூக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமிடுன் பலஸ்தீன கைதிகள் ஒரு மைப்பாட்டு வலையமைப்பு என்ற அமைப்பின் சர்வதேச ஒருங்கிணைப் பாளரான கேட்ஸ் விடுதலை செய்யப் பட்டுள்ளார் எனவும், அவருக்கு போராட் டத்தில் கலந்து கொள்வதற்கு ஐந்து மாதங்கள் தடை விதிக்கப்பட்டுள் ளதாகவும் குறித்த அமைப்பு தெரி வித்துள்ளது.

# கனடா குடியுரிமை பெற்ற பின்னர் வெளியேறும் புலம்பெயர்ந்தவர்கள்

## எண்ணிக்கை அதிகரித்துவருவதாக ஆய்வில் முடிவு



கனடா குடியுரிமை பெற்றும் – அதாவது கனேடிய குடிமக்களான பின்பும் – கனடாவிலிருந்து வெளியேறும் புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக சமீபத்திய ஆய்வொன்றின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

திங்கட்கிழமையன்று வெளியான McGill Institute for the Study of Canada என்னும் அமைப்பின் ஆய்வு முடிவுகள், கனடாவிலிருந்து வெளியேறும் கனேடியர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக தெரிவிக்கின்றன.

2017ஆம் ஆண்டுக்கும் 2019 ஆம் ஆண்டுகளுக்கிடையில் கனடாவிலிருந்து வெளியேறி வேறொரு நாட்டில் குடியேறும் கனேடியர்களின் எண்ணிக்கை 31 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

கனடாவுக்கு புலம்பெயர்ந்தவர்களில் ஒரு கூட்டத்தினர் கனடாவை விட்டு அமெரிக்கா, ஹொங்ஹொங் மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளில் குடியேறியுள்ளார்கள்.

கனடாவுடன் ஒன்றிணைந்து வாழும் அளவுக்கு பொருளாதார வசதி, அதாவது வருவாய், இது நம் நாடு என்னும் ஒரு எண்ணத்தைத் தரும் சூழல், இனவெறுப்பின்மை, வாழ வீடு, படித்த படிப்புக்கும் அனுபவத்துக்கும் ஏற்ற வேலை என்பன போன்ற விடயங்கள் கிடைக்கவில்லை என்பதாலேயே குடியுரிமை பெற்றும் புலம்பெயர்ந்தோர் வேறு நாடுகளுக்கு வெளியேறிவருகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

குறிப்பாக, குடியிருக்க சரியான வீடுகள் கிடைக்காதமையாலேயே, கனடாவுக்கு வந்து நான்கு அல்லது ஏழு ஆண்டுகளுக்குள், குடியுரிமை பெற்றும் புலம்பெயர்ந்தோர் பலர் கனடாவிலிருந்து வெளியேறுகின்றனர் என அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

மேலும், அப்படி கனடாவிலிருந்து வெளியேறி வேறு நாடுகளில் வாழ்வோர், (இவர்கள் Canadian expats என அழைக்கப்படுகிறார்கள்), இவர்களுக்கு ஒரு முறைப்பாடு உள்ளது. அதாவது, தாங்கள் வரி செலுத்தியும், மாகாண தேர்தல்களில் வாக்களிக்க அனுமதிக்கப்படுவதில்லை என்றும், மருத்துவ அமைப்பை பயன்படுத்திக்கொள்ள தாங்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கிறார்கள் அவர்கள்.

# பூர்வீகக் குடிகளுடனான உடன்படிக்கை; மேற்பார்வை செய்வதற்கு ஆணையாளர்!

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிப்பு



ஒன்ராரியோ, மே 03

பூர்வீகக் குடிகளுடனான உடன்படிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுவார் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

சுய நிர்வாகத்தில் உள்ள பூர்வீகக் குடிகளுடனான இரண்டாவது வருடாந்த கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே, பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பூர்வீகக் குடிகளுடனான உடன்படிக்கை தொடர்பில் மத்திய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் அடையாளமாக இந்த ஆணையாளர் இருப்பார் எனப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் மாதத்தின் பிற்பகுதியில் இதற்கான கலந்தாய்வுகளை நிறைவு செய்து சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்பிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

# மெக்கில் பல்கலைக்கழகத்தில் போராட்ட மாணவரின் கூடாரங்களை அகற்ற கியூபெக் முதல்வர் வலியுறுத்து



கியூபெக்,மே 03

மெக்கில் பல்கலைக்கழகத்தில் இருந்து பலஸ்தீன ஆதரவு கூடாரங்கள் அகற்றப் படல் வேண்டும் என கியூபெக் முதல்வர் தெரிவித்துள்ளார்.

மே 2ஆம் திகதி கியூபெக் நகரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த முதல்வர் பிரான்சுவா லேகோட், கூடாரங்கள் சட்டவிரோத மானவை எனத் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் இந்த கூடாரங்களை அகற்றுவார்கள் என தாம் எதிர்பார்க் கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

சட்டம் மதிக்கப்படல் வேண்டும் என தாம் கருதுகிறார் எனவும், எனவே, மெக்கில் பல்கலைக்கழக நிர்வாகம் கோரியதைப் போல, பொலிஸார் இந்த சட்டவிரோத கூடாரங்களை அகற்று வார்கள் எனத் தாம் எதிர்பார்க்கிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.




# முதியவர்களைக் குறிவைத்து மோசடி; கனடாவில் இரு தமிழர்கள் சிக்கினர்!

கனடாவின் டர்ஹாம் பிராந்தியத்தில் முதியவர்களைக் குறிவைத்து இடம் பெற்ற மோசடி தொடர்பில் இரு தமி ழர்கள் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

கடந்த மாதம் 04 ஆம் திகதி டர்ஹாம் பிராந்தியத்தில் முதியவர்களை குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட மோசடி தொடர்பான குற்ற விசாரணையை முடித்து, யார்க் பிராந்திய காவல் துறையின் உதவியுடன் நிதிக் குற்றப் பிரிவினரால் ஓர் ஆணும், ஒரு பெண் ணும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சந்தேக நபர்கள், வங்கி மற்றும் கிரெடிட் கார்டு நிறுவனப் பிரதி நிதிகள் போல நடித்து, தொலைபேசி அழைப்புகளைப் ஏற்படுத்தி, உரிய வர்களது கணக்குகள் மோசடி செய் யப்பட்டன என நம்ப வைத்து, சம்பந் தப்பட்டவரின் வங்கி அட்டைகள் மற்றும் கடவுச்சொற்களை மீட்டெடுப்பதற்காக இவர்களால் ஒரு கூரியர் (courier) அனுப்பப்பட்டு பெறப்பட்டுள்ளது.

பின்னர் அவை மோசடியான கொள்முதல் செய்யப் பயன்படுத்தப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகி றது.

இந்நிலையில், இது போன்ற சம்ப வங்கள் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் D/Cst ஐ தொடர்பு கொள்ளுமாறு அறி விக்கப்பட்டுள்ளது.




# கனடாவிலும் கூட ரயில் பயணிகள் தண்டவாளத்தைக் கடக்கும் போக்கு

கனடாவில் ரயில் நிலையம் ஒன்றில் தண்டவாளத்தைக் கடந்து பயணிகள் மேடைகள் மாறுவது தொடர்பான வீடியோ வைரலானது.

றொறன்ரோ ரயில் பயணிகள் தண்ட வாளத்தை கடக்கும் வீடியோ ஒன்று, இன்ஸ்டாகிராமில் பகிரப்பட்டதைத் தொடர்ந்து வைரல் ஆனது.

அந்த வீடியோவில், புமு இயங்கு தளத்தில் பயணிகள் குறைவான நெரிசல் உள்ள பகுதிக்கு தண்டவாளங்களைக் கடப்பது காட்டப்பட்டுள்ளது.

அப்போது பாதுகாவலர் ஒருவர் "தண்டவாளத்தை கடக்க வேண்டாம்" என்று கூச்சலிடுவதும், அவர்களை தடுக்க முயற்சிப்பதும் வீடியோவில் பதிவாகியுள்ளது.

இச்சம்பவத்தின் காட்சிகள் இணையத்தில் கணிசமான எதிர்வினைகளைப் பெற்றுள்ளன மற்றும் பெரும்பாலான மக்கள் நிலையத்தின் வடிவமைப்பை விமர்சித்தனர்.

இந்த நிலையில், புமு வுசயளெைவஜ மேற்பார்வையிடும் நிறுவனமான ஆநவசழடைெ ஒரு மின்னஞ்சல் அறிக்கையில் –

"சட்டவிரோதமாக தடங்களை கடப்பது கடுமையான அல்லது ஆபத்தான காயத்தை விளைவிக்கும். பயணிகள் ரயில் தண்டவாளத்தை எங்கும், எந்த நேரத்திலும் கடக்கக் கூடாது" என கூறப்பட்டுள்ளது.

# பச்சைவீட்டுவாயு வெளியேற்ற செயற்பாடு இலக்கை நோக்கிய தேர்ச்சியில் நகர்வு!



ஒன்ராரியோ, மே03

புதிய பச்சைவீட்டுவாயு வெளியேற்ற அறிக்கையானது 2030ஆம் ஆண் டுக்கான இலக்கினை நோக்கி தேர்ச்சியை வெளிப்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டில் கனடா முழு வதிலும், 708 மில்லியன் தொன்கள் வாயு வெளியேற்றப்பட்டதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 53 மில்லியன் தொன்கள் குறைவு என இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டைவிட 40 தொடக் கம் 45 சத வீதங்கள் வரை வெளியேற்றத்தை குறைப்பதாக பெரிஸ் கால நிலை உடன்படிக்கையில் கனடா உறுதியளித்திருந்தது.




# இந்தியாவில் இருந்து பேரர்களை பார்க்க வந்த முதிய தம்பதிகளே விபத்தில் சாவு!

ஒன்ராரியோ, மே03

கடந்த திங்கட்கிழமை டொரன்டோவின் 401 நெடுஞ்சாலையில் உயிரிழந்த 55 மற்றும் 60 வயதான முதியவர்கள் இந்தியாவில் இருந்து பேரப்பிள்ளைகளைப் பார்ப்பதற்கு வருகை தந்தவர்கள் என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

இந்த விபத்தின் போது உயிரிழந்த குழந்தையின் பெற்றோர்களான 33 வயது மற்றும் 27 வயதானவர்கள், விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

ஒன்ராரியோ மாகாணத்தில் மதுபானக் கடை ஒன்றில் திருடிய சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் துரத்தப்பட்ட நபர், 401 நெடுஞ்சாலையில் தவறான திசையில் சென்ற போது ஏற்பட்ட விபத்தில் மேற்குறிப்பிட்ட மூவருடன், சந்தேகநபரும் உயிரிழந்தார்.




# கனடிய தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடு; முதல் விசாரணை அறிக்கை இன்று வெளியீடு!

ஒன்ராரியோ, மே03

கடந்த இரண்டு கனடிய நாடாளுமன்றத் தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடுகள் தொடர்பான முதலாவது அறிக்கை இன்று வெளியாகவுள்ளது.

2019ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டு கனடாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடுகள் தொடர்பில் கசிந்த தகவல்களையடுத்து, அது குறித்து விசாரிப்பதற்கான பெடரல் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

பத்து நாள்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற பொது விசாரணைகளின் பின்னர் விசாரணைக் குழுவின் பூர்வாங்க அறிக்கை இன்று வெளியாகின்றது.

வெளிநாட்டுத் தலையீடுகளின் சீனாவே பிரதான நாடு என கனடாவின் புலனாய்வு நிறுவனம் தெரிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.